# பச்சிலப்பள்ளி பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 15 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 04 இல் கணக்காய்விற்காக சமரப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 14 இல் சபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய பச்சிலப்பள்ளி பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவரிற்கு சமர்ப்பிக்கப்பட்ட என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களின் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய பச்சிலப்பள்ளிப் பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்டுத்தப்பட்டிருக்கவிலை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் செலவினம், வருமானங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | செலவினங்கள் | | வருமானங்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 16,000 | - | - | - | - |
| குறைத்துக் கூறல்கள் | - | - | 01 | 144,161 | 02 | 592,688 |

**1.3.3. கணககாய்விற்கான சான்றுகளின்மை**

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்காமை**

ரூபா 9,956,790 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

**1.3.4. செலுத்தவேண்டிய கணக்குகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக செலுத்த வெண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 46,800 ஆகும்.

**1.3.5. இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபை அதிகாரச்சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 19(i) ஆம் பிரிவு | அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை குறிக்கின்ற பதிவேடு சபையால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | |
| (i) அத்தியாயம் xii இன் 5 ஆம் | காசு மற்றும் களஞ்சியங்களை |

| | |
|---|---|
| பிரிவு | கையாளும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் V இன் 140 ஆம் பிரிவு | தலவரால் ரூபா 78,855 தொகையான முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) சுற்றறிக்கைகள்<br>1990 ஒத்தோபர் 10 ஆந்திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகக் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின்படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலாக வருமானத்தை மிகை ரூபா 1,097,202 ஆகும் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,690,373 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2011 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப் பட்டது** | **உள்ளபடி யானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா 000** | **ரூபா 000** | **ரூபா 000** |
| இறைகளும் வரிகளும் | 18 | 10 | - |
| குத்தகை வாடகைகள் | 2,392 | 2,851 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 86 | 99 | - |
| வேறு வருமானங்கள் | 14,665 | 12,576 | 1,340 |
| மொத்தம் | 17,161 | 15,536 | 1,340 |

**2.2.2. முத்திரைக் கட்டணங்கள்**

உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 பிரச்சார விளப்பர பதாகைகள் மற்றும் தொலைத் தொடர்பு கோபுரங்கள் மீதான கட்டணங்கள்**

அ) சபையின் அதிகாரத்தின் கீழான பகுதிகளில் அமைக்கப்பட்ட ஒரு பிரச்சார விளம்பர பதாகைகள் தொடர்பில் ரூபா 90,000 தொகையான கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லைனெ மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் வெளிப்பட்டது.

ஆ) சபையின் அதிகாரத்தின் கீழான பகுதிகளில் அமைந்துள்ள ஒரு மொபிட்டல் மற்றும் ஒரு டயலக் கோபுரத்திலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**2.3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ). ரூபா 882,570 கிரயத்தில் புதுக்காட்டுச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டிடம2011 யூன் மாதத்திலிரந்து பயன்பாடின்றி விடப்பட்டிருந்தது.

ஆ). பிரதேச சபையில் ஒரு ஆண்டிற்கு மேலாக ரூபா 54,000 பெறுமதியான இரண்டு வெளிக் கதவுகள் பயன்பாடின்றி விடப்பட்டிருந்தது.

**2.3.2. பெறவேண்டிய கணக்குகள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேலாக பெற வெண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,340,029 ஆகும்.

**2.3.3. அறவிடவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்**

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வெண்டிய கணக்கு மீதிகள் ரூபா 2,537,246 கூட்டு மொத்தமாகும் அதேநேரம் 01 ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகள் ரூபா 1,211,245 ஆகும்.

## 2.4. செயலாற்றல்

சபையால் நிதியாண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் எதிபார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் அவற்றின் மீதான முன்னேற்றம் என்பவற்றினை மதிப்பிட முடியாதிருந்தது.

## 2.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 வாகனங்களின் உரிமையாண்மையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டு ஏற்பாடு இல்லாமல் முல்லைத்தீவு உப அலுவலகத்திற்கான கட்டிட நிர்மாணத்திற்கு ரூபா 101,688 செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிர்வாகம்

கொள்வனவு வழிகாட்டலைப் பின்பற்றாமல் இயக்கச்சி உப அலுவல வேலியடல் வேலைகளிற்காக ரூபா 88,435 செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2.7. உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையால் போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ). கணக்கீடு
(ஆ). பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ). வருமான சேகரிப்பு
(ஈ). ஒப்பந்த நிர்வாகம்